THE AGRICULTURIST

A monthly Journal devoted to agriculture and its allied subjects

கிருஷிகன்

ஓர் மாதாந்தர விவசாயப் பத்திரிகை

Vol. 1 / புத்தகம் 1 — சௌமிய௵ பங்குனி௴ 1௳ / 1910௵ மார்ச்சு௴ 14௳ — No. 12 / பிரதி 12

முக்கியமான நோட்டீஸ்

IMPORTANT NOTICE

இச்சஞ்சிகையுடன் நமது "கிருஷிகன்" முதல்வருஷம் பூர்த்தியாயிற்று. குழந்தைகளுக்கு முதல் வருஷத்தில் அநேகவியாதிகள் ஏற்படுவதைப்போல் சாதாரணமாகப் பத்திரிகைகளுக்கும் முதல் வருஷத்தில் அநேக இடையூறுகள் நேரிடுவது சகஜமென்பதை எல்லாரும் அறிவார்கள். ஆனால் நமது "கிருஷிகனுக்கு" அப்பேர்ப்பட்ட வியாதிகள் ஒன்றுமில்லாமல் ஒவ்வொரு தமிழ் மாதம் முதல் தேதியிலும் தவறாமல் வெளிவந்ததைக் குறித்து நாம் சந்தோஷிக்கிறோம். வருஷ சந்தா அணா 12 அதிக சொற்பமென்றும் ஆகையால் பத்திரிகை சரிவர நடைபெறுவது சந்தேகமென்றும் அநேகர் நினைத்தார்கள். இலாபத்தை உத்தேசியாமல் நமது தேசத்து விவசாயம் விருத்தியடையவேண்டும் என்னும் ஒரு விஷயத்தையே நாம் முதன்மையாக வைத்துப் பிரசுரித்து வருவதால் இலாபம் வந்தாலும் சரி, நஷ்டம் வந்தாலும் சரி, கை முதல் வைத்தாவது தவறாமல் நமது ஆயுள்பரியந்தம் நடத்தவேண்டுமென்று நினைத்திருக்கிறோம். சென்ற வருஷத்தைப்போலவே எப்போதும் "கிருஷிகனை"ப் பாதுகாத்துச் சரிவர நடத்தி வரவேண்டுமென்று சர்வ சக்தியுள்ள கடவுளைப் பிரார்த்திக்கின்றோம். நிற்க, சென்றவருஷத்தில் "கிருஷிகனை" ஆதரித்துவந்த சந்தாதாரர்களெல்லாம் இனிமேலும் ஆதரித்து

வருவதோடு அவரவர்களுடைய நண்பர்களெல்லாருக்கும் நமது நோக்கத்தையும் கருத்தையும் சஞ்சிகையின் உபயோகத்தையும் தெரிவித்து அவர்களையும் "கிருஷிகனை" வாங்கும்படி தூண்ட வேண்டுமென்று பிரார்த்திக்கிறோம்.

"கிருஷிகன்" இரண்டாவது வருஷம் சாதாரண௵ சித்திரை௴ முதல் ஆரம்பமாகிறபடியால் அந்த வருஷத்து சந்தாவாகிய ௹ 12-ம் வி. பி. கமிஷன் ௹ 1-ம் ஆக ௹ 13-க்கு அடுத்த மாதத்தின் சஞ்சிகையை வி. பி. மூலமாய் அனுப்புவோம். வி. பி. மூலமாய்ப் பெற விரும்பாத கனவான்கள் தயவு செய்து உடனே ௹ 12 மணியார்டர் செய்யவேண்டியது. இனி சஞ்சிகையே தேவையில்லையென்று நினைக்கும் கனவான்கள் உடனே நமக்குத் தெரிவித்துவிட்டால் நாம் வி. பி. மூலமாய் அனுப்பி நஷ்டமடைய மாட்டோம். ஒன்றும் எழுதாமல் சும்மாயிருந்துவிட்டு வி. பி. யை வாபஸ் செய்து நம்மை நஷ்டப்படுத்த மாட்டார்களென்று நம்புகிறோம். பரோபகாரார்த்தமாகப் பிரசுரிக்கும் ஒரு விஷயத்தை மட்டுமோவது உத்தேசித்து வி. பி. யை வாபஸ் செய்யாமல் பெற்றுக் கொள்ளுவார்களென்று நம்புகிறோம்.

கடைசியாக நமது "கிருஷிகனை" தேதிதவறாமல் பிரசுரமாகும்படி அச்சடித்துக்கொடுத்து வந்த மேஸர்ஸ் லோகநாதம் பிரதர்ஸ் அவர்களுக்கு நமது மனப்பூர்வமான வந்தனமளிக்கிறோம்.

பத்திராதிபர்.

கால்நடை மரணம்

CATTLE MORTALITY

நமது ராஜதானியில் சற்றுஏறக்குறைய 1,80,00000-கால்நடைகள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. அவைகளில் சென்ற செப்டம்பர்௴ 30௳யுடன் முடிவான 3-மாதத்தில் 36,288 கால்நடைகள் மரணமானதாகத் தெரியவருகிறது. வெக்கை முதலான தொத்துவியாதிகளால் மரணமான கால்நடைகளின் எண்ணம் 32,658. பாம்பு கடித்ததாலும் காட்டு மிருகங்களாலும் விஷமிட்டதாலும் நேரிட்ட மரணங்கள் 3,630-என்று தெரிகிறது. 1908௵ செப்டம்பர்௴ 30௳யோடு முடிவான 3-மாதத்தில் தொத்து வியாதிகளால் 59,836-கால்நடைகளும் மேலே சொன்ன இதர காரணங்களால் 3542-கால் நடைகளும் ஆகமொத்தத்தில் 63,378 கால்நடைகள் மரணமடைந்தன. 1908௵ டிசம்பர்௴ 31௳யோடு முடிவான 3-மாதத்தில் தொத்து வியாதிகளால் 58,985 கால்நடைகளும் இதர காரணங்களால் 3,781 கால்நடைகளும் ஆக 62766 கால்நடைள் மரணமாயின. 1909௵ மார்ச்சுமாதம்31௳யுடன் முடிவான 3-மாசத்தில் தொத்து வியாதியால் 46,713ம் இதர காரணங்களால்

2,734 ஆக 49,447 கால்நடைகள் மரணமாயின. 1909ஹு ஜுன்மீ 30வயுடன் முடிவான 3 மாசத்தில் தொத்து வியாதிகளால் 35,533ம் இதர காரணங்களால் 2,769-ம் ஆக 38302 கால்நடைகள் மரணமாயின. இதைப் பார்க்கும்போது வரவர தொத்து வியாதிகளால் நேர்ந்த மரணம் வெகுவாகக் குறைவுபட்டு வருகிறதென்று வெளியாகிறது. இந்தக் கணக்கை விவரமாய்ப் பரிசோதிக்கையில், மலையாளம், வடஆற்காடு, திருச்சினுப்பள்ளி, கோயம்பத்தூர், மதுரை, தென் ஆற்காடு, திருநெல்வேலி முதலான ஜில்லாக்களில் முன் வருஷத்தைவிட சென்ற வருஷத்தில் வெக்கை, கால் நோய் வாய் நோய், என்றும் இரண்டு தொத்து வியாதிகளில் நேரிட்ட மரணம் மிகக்குறைவாக இருந்ததாக வெளியாகிறது. அடைப்பான் சப்பை நோய் மின்னே அடைப்பான் முதலிய தொற்றுவியாதிகளில் நேர்ந்த மரணங்கள் அனேகமாய்க் குறைவுபடவில்லை. இதற்கு முக்கிய காரணம் வெக்கை நோய் கால்நடைகளுக்குத் தாக்காமல் தடைசெய்யும்பொருட்டு அம்மைகுத்தல் என்றும் நூதன முறையை எல்லா ஜில்லாக்களிலும் சென்றவருஷத்தில் அனுஷ்டானத்திற்குக்கொண்டுவந்ததுதான் என்று தெரியவருகிறது. இப்படித் தென்ஜில்லாக்களில் அம்மை குத்தப்பட்ட கால்நடைகளின் எண்ணம் அடியிற் காணப்படும்.

சென்னப்பட்டணம்	50
செங்கல்பட்டு ஜில்லா	1470
தென் ஆற்காடு	930
வடஆற்காடு	863
சேலம்	483
கோயம்பத்தூர்	372
திருச்சினுப்பள்ளி	1,024
தஞ்சாவூர்	1,119
திருநேல்வேலி	1270
நீலகிரி	434

இவ்விதமாக வெக்கை என்னும் வியாதியில் நேர்ந்த மரணங்கள் முன் வருஷத்தைவிட வெகு குறைவாயிருக்க அடைப்பான் என்னும் வியாதியால் இரண்டு மடங்கு கால்நடைகள் மரணமடைந்ததாகத் தெரியவருகிறது. இதற்குக் காரணம் என்னவெனில் இவ்வியாதியைத் தடுக்கக்கூடிய அம்மைபால் கிடையாமையால் அவ்வியாதிக்கு அம்மை குத்தமுடியாமல்போனதுதான். இவ்வியாதிக்கும் அம்மை குத்தி இருந்தால் இதில் நேர்ந்த மரணங்களும் வெகுவாய் குறைந்திருக்குமென்று நம்ப இடமுண்டாகிறது. ஆகையால் நமது கிருஷிகர் கால்நடை தொத்துவியாதிகளுக்கு அம்மை குத்துவதால் உண்டாகும் அநுகூலங்களை நன்றாய் உணர்ந்து தமது கிராமங்களுக்கு அருகே தொத்து வியாதிகளில் ஏதாவது

ஒன்று உண்டானதாகத் தெரியவந்தால் அவ்விஷயத்தை உடனே அந்தத் தாலூக்கா தாசில்தார் அவர்களுக்குத் தெரியப்படுத்தி அந்த ஆபீசர் மூலமாகக் கால்நடை வைத்திய நிபுணர்களைக்கொண்டு தங்கள் கால்நடைகளுக்கு அம்மைகுத்திக் கொள்ளுவார்களென்று நாம் நம்புகிறோம். இப்படி அம்மை குத்துவதால் கால்நடைகளுக்கு யாதொரு தீங்கும் நேரிடுவதில்லை. அப்படி நேரிடுமென்று கிருஷிகர் பயப்படுவது மதியீனம்.

பட்டுநூல் கைத்தொழில்

THE SILK INDUSTRY

நமது நாட்டிலுள்ள ஜனங்கள் தங்களின் முன்னோர் செய்து வந்த காரியங்களில் எளிதாய்ச் செய்யக்கூடியவைகளை மட்டும் கைக்கொண்டு நடத்தியும், சற்றுப் பிரயாசமுண்டாகக் கூடியவைகளைக் கொஞ்சங் கொஞ்சமாய் நாளடைவில் கைவிட்டும் உலகோர் புகழ்ந்துவந்த நமது தேசத்திலுள்ள மேன்மையான கைத்தொழில்களை யழியவிட்டார்கள். ஏதோ கிடைத்தமட்டிலும் தங்களுக்குள்ள நிலத்தின் விளைபொருட்களை ஆகாரமாக்கிக்கொண்டு அதிக ஆடம்பரம் ஒன்றுமின்றிச் சிறுவீடுகளில் வசித்து சிறுகவாழ்ந்து காலங்கழித்தோராதலால் அவர்களுக்கு அதிகமான பணச்செலவென்பதில்லாமலும், அதிக மேன்மையடையவேண்டுமென்னும் தூண்டுதல்களாவது அவசியமாவது இல்லாமலும், வைதீக வேதாந்தவிஷயங்களில் மனதைச் செலுத்தி "இவ்வுலகம் அழிந்துபோகும்; இதின்வாழ்வு நிலையற்றது. மாயையின் காரணத்தில் இவ்வுலகம் நிலைத்திருப்பதுபோல் தோன்றுவதே யொழிய, அந்த மாயையை யொழிக்கும்போது இது பொய்யான உலகமெனத் தெளிவாய்த் தெரியும். ஆகையால் பரசுகத்தைத்தேடி தவத்தை நாடியே இருப்போமாக!" என்னும் ஞானமானது அந்தணரிடத்திருந்து உலகத்தை ஆண்டுவந்த அரசருக்கும் போதிக்கப்படவே அவர்களும் உலகத்தில் வெறுப்படைந்து எல்லா வகையான சுதர்மங்களையும் கைவிட்டனர். இதை இன்னும் விவரிக்க வேண்டியதேன்? இதனாலேயே இத்தேசத்திலுள்ள பல அருமையான கைத்தொழில்களும், வியாபாரமும், விவசாய மேன்மையும் ஒழிந்துபோயின. போனதைப்பற்றித் துக்கித்துப் பலனென்ன?

தற்காலத்திலுள்ள ஜனங்களாவது மற்றதேசங்களில் என்ன நடக்கிறதென்பதைக் கவனித்து அவர்கள் செய்துவரும் அனந்தக் காரியங்களில் ஆயிரத்துக்கொன்றாவது செய்யப் பிரயாசைப்படுவார்களானால் நாளடைவில் நாம் முன்னுக்கு வரலாம். ஸ்ரீமான் சி. எஸ். ரகுநாதராயரவர்கள் இவ்வுலகத்தில் பட்டு வஸ்திரக் கைத்தொழில் எப்படி நடக்கிறதென்பதைப்பற்றி ஒரு வியாஸம் வெளி

யிட்டிருக்கிறார்கள். அதினால் பற்பல தேசங்களில் எவ்வளவு பட்டு உண்டாக்கப்படுகிறதென்றும் எவ்வளவு பட்டு அங்கங்கே செலவாகிறதென்றும் தெரியவருகிறது.

உண்டாகும்பட்டின் விலை				செலவாகும்பட்டின் விலை		
சீனா	290	லக்ஷம் பவுன்		164	லக்ஷம்	பவுன்
ஜப்பான்	250	,, ,,		101	,,	,,
இத்தாலி	100	,, ,,		79	,,	,,
லிவான்டு	56	,, ,,				
இந்துசைனா	24	,, ,,	இந்தியா	11	,,	,,
ஐரோப்பா	24	,, ,,		32	,,	,,
பிரான்சு	14	,, ,,		100	,,	,,
மற்றதேசங்கள்	12	,, ,,		21	,,	,,
அமெரிக்கா ஐக்கிய மாகாணங்கள்				188	,,	,,
ஜெர்மனி				74	,,	,,
மொத்தம்	770	இலக்ஷம் பவுன்		770	இலக்ஷம்	பவுன்.

இந்தக் கணக்கினால் சீனாதேசத்தில் தான் எல்லாதேசங்களைப் பார்க்கிலும் அதிகமானபட்டு உண்டாகிறதாக வெளியாகிறது. என்றாலும் ஜப்பான் தேசத்தில் இந்தக் கைத்தொழில் சிலகாலமாய் அடைந்திருக்கும் அபிவிர்த்தியைக் கவனிக்கும்போது அத்தேசத்தின் பெருமை நன்றாய்த் தெரியவரும்.

இந்த அபிவிர்த்திக்கு முக்கியமான காரணங்கள் என்னவெனில் (1) ஜப்பான் தேசத்தின் சீதோஷ்ணநிலமையானது கம்பளிச்செடிகள் உண்டாவதற்கும் பட்டுப்பூச்சியின் அபிவிர்த்திக்கும் ஏற்றதாயிருக்கிறது; (2) அத்தேசத்தின் இராஜங்கத்தார் அந்தக் கைத்தொழிலை ஜாக்கிரதையுடன் மேல்பார்த்து விர்த்திசெய்து நடத்திவருவது; (3) வேலை நடத்துவதற்கு வேண்டிய எண்ணிறந்த வேலையாட்கள் அகப்படுவதும் அவர்கள் அக்கைத்தொழில் வேலைகளில் வெகு எளிதிலும் சீக்கிரத்திலும் பழகிக்கொள்ளுதலும்; (4) ஜப்பானியருக்குச் சித்திரவேலைகளிலுள்ள பிரியமும் நூதன கைத்தொழில்களை விர்த்திசெய்விப்பதில் அவர்களுக்குள்ள ஊக்கமும் விடாமுயற்சியும் என்பவைகளே.

ஜப்பான் தேசத்திலுள்ள கிருஷிகர் தங்கள் ஆகாரத்துக்கு வேண்டிய நெல் முதலிய பல தானியங்களைப் பயிரிடுவதில் முயன்றுவர, அவர்களின் பெண்களும் பிள்ளைகளும் பட்டுப் பூச்சிகளை வீட்டில் வைத்து வளர்த்து அபிவிர்த்திசெய்து பட்டு உண்டாக்கி வருகிறார்கள். இப்படி இந்த ஜனங்களுக்கு இந்தத் தொழில்களில் ஊக்கம் உண்டாகும்பொருட்டு அத்தேசத்தில் முன்னிருந்த அரசன் தானே அரண்மனைத் தோட்டத்தில் நெல் வயல் ஒன்றுண்டாக்கி

அதில் நெல் பயிர்செய்து அனுபோகத்தை யடையவும், அவர் தேவியான இராணி தன் பிரியசகிகளுடன் அரண்மனை அந்தப்புரத்தின் ஓர் பாங்கில் பட்டுப்பூச்சிகளை வளர்த்து விர்த்திசெய்யும் வேலையை அனுபவபூர்வமாய் நடத்திக் கற்றுக்கொண்டதாகவும் சரித்திர மூலமாய் அறிகிறோம். அந்தத் தேசத்து அரசனும் அரசியும் அவ் விஷயத்தில் அவ்வளவு ஊக்கத்துடன் முயற்சி செய்ததுவாஸ்தவமானால் அந்தக் குடிகள் அந்தக் கைத்தொழிலில் விர்த்தியடைவதற்கு அந்த இராஜாங்கத்தார் என்னதான் செய்திருக்கமாட்டார்கள்? அப்படிப்பட்ட இராஜ்யத்தில் அந்தக் கைத்தொழில் முன்னுக்கு வரக் கேட்பானேன்?

அமெரிக்கா தேசத்து ஐக்கியமாகாணங்களில் அதிக ஜாஸ்தியான விலைமதிப்புள்ள பட்டுக் கைத்தொழில் நடப்பதாயிருந்தாலும், அப்படிச்செய்யப்பட்ட வஸ்திரங்கள் கொஞ்சமும் அங்கிருந்து வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி யாவதேயில்லை. ஏனென்றால், அத்தேசத்திலுள்ள ஜனங்களுக்கே அங்கு நெய்யப்படும் பட்டு வஸ்திரங்கள் போதாது. ஜப்பான், சீனா, இத்தாலி, சுவிட்சர்லாந்து இந்தத் தேசங்களிலிருந்து அயல்தேசங்களுக்குப் பட்டு வஸ்திரங்கள் அபரிமிதமாய் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

1805-ம் வருஷத்துக்கு முன் இத்தேசத்தில் வங்காளத்தில் அதிகமான பட்டு உண்டாக்கப்பட்டு வந்தது. அவ்வருஷத்தில் வங்காளத்திலிருந்து இங்கிலாந்துக்கு 8,35,904 பவுன் விலையுள்ள பட்டு ஏற்றுமதி செய்யப்பட்டது. அது முதல் 1835-ம் வருஷம் வரையில் இந்தப் பட்டு வியாபாரம் கனந்தங்கிய ஈஸ்த் இந்தியா கம்பனியாரால் நடத்தப்பட்டு வந்தது. 1835-ம் வருஷத்தில் அந்தக் கம்பனியார் அவ்வியாபாரத்தை மேல் நடத்தாமல் விட்டுவிடவே அதுமுதல் அது க்ஷீணித்துக் கெட்டுப்போயிற்று.

1908-09-ம் வருஷத்தில் இந்தத் தேசத்திலிருந்து அயல்தேசங்களுக்கு ஏற்றுமதியான பட்டு விலை 54-லக்ஷ ரூபாய் ஆயிற்று. அயல் தேசங்களிலிருந்து இங்கு இறக்குமதியான பட்டின் விலையோ ஒரு கோடிரூபாய்க்கு மேலாயிற்று. இங்கிருந்து அயல்தேசங்களுக்கு ஏற்றுமதியான பட்டுவஸ்திரங்களின் விலை 7-லக்ஷ ரூபாய் ஆயிருக்க, அயல்தேசங்களிலிருந்து இந்தத்தேசத்தில் இறக்குமதியான பட்டு வஸ்திரங்களின் விலை மதிப்பு 2-கோடி 28-லக்ஷ ரூபாய் ஆயிற்று. இவ்விதமாக ஏற்றுமதி இறக்குமதி கணக்கை அனேக வருஷங்களுக்குப் பரிசோதித்துப் பார்க்கும்போது வரவர ஏற்றுமதி குறைந்து போயும், அதற்குத் தக்கதாக இறக்குமதி அதிகமடைந்தும் வந்திருக்கிறது. சென்ற 9-வருஷக்காலமாக அயல் தேசங்களிலிருந்து இந்தத் தேசத்துக்குச் சுமார் 75-இலக்ஷம் ரூபாய் பெறுமான பட்டும் 2-கோடி ரூபாய் பெறுமான பட்டு வஸ்திரங்களும் இறக்குமதியாகிக்

கொண்டு வந்திருக்கின்றன. இது முக்கியமாக சீனா, ஜப்பான், பிரான்சு, இங்கிலாந்து தேசங்களிலிருந்தே வந்திருக்கிறது.

நமது தேசத்துக்கு வேண்டிய பட்டுநூல் முழுவதும் இங்கேயே உண்டாக்கக்கூடாதா? என்னும் விஷயத்தை யோசித்தால், ஏன் கூடாது? கூடவே கூடும் என்றுதான் சொல்லவேண்டும். ஏனெனில் நூறுவருஷங்களுக்குமுன் தற்காலம் இறக்குமதியாகும் அளவுக்கு அதிகமாகவே பட்டுநூல் இங்கிருந்து ஏற்றுமதியாகிவந்ததே. அப்படியிருக்க இப்போது ஏன் அந்தக் கைத்தொழிலை விர்த்திசெய்துகொள்ளக்கூடாது? பருத்திநூல் வஸ்திரங்கள் இத்தேசத்தில் நெசவாவது போலவே பட்டுவஸ்திரங்களையும் இங்கே ஏன் நெசவுசெய்யக்கூடாது? நாளாவட்டத்தில் செய்யக்கூடும் என்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. நமது கவர்ன்மெண்டார் இவ்விஷயத்தில் தக்கமுயற்சிசெய்து ஏனோதானோ வென்றிருக்கும் நமது கிருஷிகருக்கு ஊக்கத்தையுண்டாக்கினால் நமது தேசம் முன்னுக்கு வரக்கூடும்.

ஒங்கோல் கால்நடைக் காட்சி

THE ONGOLE CATTLE SHOW

சென்ற பிப்பிரவரிமீ 22உயன்று ஒங்கோலில் வழக்கப்படி கால்நடைக்காட்சி நடந்தேறியது. அதில் முன்போல விவசாய இலாகா கமிஷனரான கனந்தங்கிய காசில் ஸ்டுவேர்ட் ஸ்டுவேர்ட்துரையவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள். குண்டூர் ஒங்கோல் முதலானவிடங்களிலிருந்து அனேக கிருஷிகரும் உத்தியோகஸ்தரும் அங்கு வந்திருந்தார்கள். பைராகி மடத்தோப்புக்கு எதிராக எப்போதும்போல் பெரிய பந்தல் போடப்பட்டு அதில் குண்டூர் ஜில்லா கலெக்டரான மெஸ்தர் மக்கைவர் துரையவர்களும், டிவிஷனலாபீஸர் ம-ா-ா-ஸ்ரீ வி. பாண்டுரங்கராவ் அவர்களும், ரெவரென்ட் பாடன், காப்டன் டாசன், மெஸ்தர் அய்ச்சீஸன், ம-ா-ா-ஸ்ரீ இராமசாமி அய்யர் அவர்கள், கிருஷ்ணராவ், நாராயணராவ், புன்னையா, நாராயணசாஸ்திரி, வெங்கடசுப்பராவ், சுப்பராவ் அவர்களும் மெஸ்தர் புல்மோர் முதலிய அனேக கனவான்களும் வந்திருந்தனர். அப்பொழுது ம-ா-ா-ஸ்ரீ நாராயணராயரவர்கள் அக்கிராசனாதிபதி யவர்களுக்கும் மற்றவர்களுக்கும் நல்வரவு கூறி அடியில் கண்டவாறு உபந்நியாசம் செய்தார்.

நீர்வளம் மிகுதியுமில்லாத இந்த ஒங்கோல் நாட்டில் கால்நடைகள் விர்த்தியடையக்கூடிய சாதனங்கள் ஏதோ அமைந்திருப்பதானது எல்லாருக்கும் விபரீதமாகவே யிருக்கலாம். என்றாலும் இத்தேசத்திலுண்டாகும் கால்நடைகள் பிரேசில் முதலான தூரதேசங்களிலும் பிரசித்திபெற்றிருக்கின்றன வென்பதில் ஆக்ஷேபனையில்லை. இவ்வருஷத்தில் காலமழையானது சுத்தமாயில்லாமல் போனதினால் கால்நடைகளுக்கு ஆகாரமாயிருக்கும் சோளப்பயிர் கெடுதியடைந்து போனதையிட்டு இக்கால்நடைக்காக்ஷி சரியாய் முடிவுபெறுமோவென்னும் சந்தேகம் அதிகமாயிருந்தது. மேலும் அப்பட்டணத்தில் பெரியம்மை வியாதி பரவியிருப்பதால் அங்கே ஜனங்கள் கூடுவார்களோவென்பது அதிக யோசனையாயிருந்தது. என்றாலும் சுமார் 1000-கால்நடைகள் வரையிலும் அங்குக் கூடியிருந்ததால் அக்காக்ஷி

சரியாய் நடைபெறும் எனத் தோன்றிற்று. ஓங்கோல் கால்நடைகள் நாளாவட்டத்தில் அதிகமாய் விருத்தியடைந்து அவைகளை வளர்ப்பவர்களுக்கு அதிக இலாபகரமா யிருக்கின்றன வென்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். கவர்ன்மெண்டார் அதிகக் கருணையுடன் இந்தக் காட்சியின் பொருட்டு பொருளுதவி செய்ததற்காக எல்லாரும் நன்றியறிதலுள்ளவர்களா யிருக்கவேண்டும். கிருஷிகரின் பொருட்டு அதிகமாய் உழைத்துவரும் மெஸ்தர் காசில்ஸ்டூவர்ட் ஸ்டூவர்ட் அவர்களுக்குக் கவர்ன்மெண்டார் சி. எஸ். ஐ. பட்டம் கொடுத்ததையிட்டு அவருக்குத்தக்க முகமன் கூறவேண்டும். இவ்விடத்தில் கவர்ன்மெண்டார் ஓர் கால்நடை வைத்தியசாலை ஸ்தாபித்திருப்பதற்காகச் சந்தோஷிக்கவேண்டும். இந்தப் பிராந்தியத்திலுள்ள ஜனங்கள் இக்காக்ஷியினால் உண்டாகும் பல அனுகூலங்களை நன்கறிந்து அதனால் பயனடைந்து வருகிறார்கள். இக்காக்ஷியில் கால்நடைகள் வியாபாரமும் நடந்துவருகிறது. சென்ற வருஷத்தில் 60,000 ரூபாய் பெறுமான கால்நடைகள் இங்கே விலை செய்யப்பட்டன. கால சுபிக்ஷக்குறைவால் விவசாய சம்பந்தமான காக்ஷி இவ்வருஷம் நடத்தக் கூடாமல்போயிற்று. இக்காக்ஷி நடத்துவதற்காகப் பண உதவி செய்த அனேக கனவான்களுக்கு நாம் மிகவும் நன்றியறிதலுள்ளவர்களாயிருக்க வேண்டும் என்று சொல்லி முடித்து அக்கிராசனாதிபதியவர்களைக்கொண்டு காக்ஷிசாலையை எல்லாரும் போய்ப்பார்க்க உத்திரவளிக்கக் கேட்டுக்கொண்டார்.

அதன்மேல் அக்கிராசனாதிபதியவர்களான கனந்தங்கிய காசில்ஸ்டூவர்ட் ஸ்டூவர்ட் துரையவர்கள் அடியிற்கண்டபடி பேசினார்.

மழைக்குறைவினால் ஓங்கோல் தாலூக்காவின் சில பாகங்களில் பயிர்கள் நஷ்டமானது வாஸ்தவமாயினும், அதனால் ஜனங்கள் அதிகமாய் அதைர்யமடைவதற்கு முகாந்தரமில்லை யென்றும், ஆனாலும் ஜனங்களுக்குக் கொஞ்சம் பஞ்சநிவர்த்தி ஏற்பாடுகள் செய்யவேண்டியது அவசியமாயிற்றென்றும், அதனால் இந்தப் பசலிக்குக் குடிகள் செலுத்தவேண்டிய கடைசி மூன்று கிஸ்திகளையும் நிறுத்திவைக்கும்படி கலெக்டர் துரையவர்கள் சிபார்சு செய்திருப்பதாயும், ரெவினியூ போர்டாரவர்கள் அதைப்பற்றி அனுகூலமான அபிப்பிராயமுடையவர்களாயிருப்பதால் கவர்ன்மெண்டாரும் அனுகூலமான பைசல் செய்வார்களென்று நம்புவதாயும், தான் முன் வருஷங்களில் பார்த்த அளவுக்குக் கால்நடைகள், அவ்வளவு செழிப்பாய்க் காணப்படாது தீவனக்குறைவின் பலனாயிருக்கலாமானாலும், கால்நடைகள் அதிகமாய் மெலிந்து க்ஷீணஸ்திதியை யடைந்துபோனதாய்க் காணப்படவில்லையென்றும், இப்படியிருப்பதற்குக் காரணமென்னவெனில் குடிகள் தாங்கள் பட்டினி கிடந்தாலும் தங்கள் கால்நடைகளைப் பட்டினி கிடக்க மனஞ் சகியாமல் அதிகப் பக்ஷத்துடனும் ஜாக்கிரதையாயும் அவைகளைப் போஷித்துக்காப்பாற்றுவதுதான் என்றும், தான் வெகுகாலமாக நினைத்திருந்தபடி மலைக்காடுகளிலிருக்கும் புல்லை அறுத்து நாட்டிலுள்ள கால்நடைகளைப் போஷிக்கவேண்டியதற்கு ஜனங்கள் இப்போதுதான் கொஞ்சம் பிரயத்தனம் செய்துவருகிறார்கள் என்றும், தற்காலத்தில் புல்லைக்கட்டுக்கட்டாய்க் கட்டிக்கொண்டு வரவில்லையாதலால் இவ்விஷயத்தில் கொஞ்சம் சிரமமும் செலவும் அதிகமாய் ஏற்படுகிறதென்றும், இந்நாட்டிலுள்ள குடிகள் தங்களுக்கு வேண்டிய அளவுக்கு மேய்க்கால் நிலங்கள் இல்லை என்று அடிக்கடி ஆவலாதி சொல்லிவருகிறார்கள் என்றும் ஆனாலும் தம் அபிப்பிராயத்தில் ஒருவிதத்தில் யோசிக்கும்கால் அதிக ஜாஸ்தியான மேய்க்கால் நிலங்

கள் இருக்கிறதென்று நினைக்கவேண்டுமென்றும், மற்றொரு இடத்தில் மேய்க்கால் நிலங்கள் மிகவும் குறைவாய் இருப்பதாகச் சொல்லவேண்டுமென்றும் தற்காலத்தில் புறம்போக்கு நிலங்களில் மரங்களும் கற்களும் தவிர புல்என்னும் பேர்கூட இல்லாமல் போகும்படியான அளவுக்கு அதிகமான கால்நடைகள் யாதொரு நிபந்தனையும் இல்லாதபடி எக்காலத்திலும் மேய்ந்து புல்லைச் சர்வநாசமாக்கி விடுகிறதென்றும் அதனால் கால்நடைகளுக்கு மேய்ச்சல் இல்லாமல் மெலிந்து கேவலஸ்திதியை அடைந்து இருக்கிறதென்றும் ஆகையினால் ஒங்கோல் கிருஷிகர் செய்யும் விதமாய் கால்நடைகளுக்கு கைத்தீவனம் கொடுத்தும் அவைகளைத் தொழுவில்கட்டி போஷித்தும் வருவது உசிதமென்றும் கிருஷிகருக்கு வேண்டியதெல்லாம் தங்கள் கால்நடைகள் பிரதிதினமும் வெளியேபோய் திரிந்து காலாறிவருவதற்கு அவசியமான காலிநிலங்கள் மட்டுமே வேண்டியதென்றும், சர்க்கார் பந்தோபஸ்துக்காக காடுகளில் கால்நடைகள் மேய அனுமதிகொடுப்பது அனாவசியமென்றும், கால்நடை தீவனப்பயிர்கள் சாகுபடி செய்வதினாலேயோ அல்லது மலைக்காடுகளிலிருந்து புல் அறுத்து கட்டிக்கொண்டுவந்து கால்நடைகளை போஷிப்பதினாலேயோ தங்கள் கால்நடைகளை சரியான நிலைமையில் வைத்துக்கொள்ளக்கூடும் என்பது தம் அபிப்பிராயமென்றும், கால்நடைகள் ரிசர்வ்காடுகள் தேடி அனேக மைல் தூரம் போய் மேய்ந்து வருவதிலும் அங்குக் காட்டிலாக்காவைச்சேர்ந்த தாழ்ந்த உத்தியோகஸ்தர்களால் நேரும் அனேக கஷ்டநஷ்டங்களை உத்தேசித்தும், கிருஷிகர் காட்டு இலாக்கா எல்லைக்கு வெளியில் பாரஸ்டு டிபார்ட்மெண்டாரால் கொண்டுவந்து சேர்த்து வைக்கப்பட்ட புல் கட்டுகளை வாங்கி தீவனமாக உபயோகப்படுத்திவரக் கூடியதான ஏற்பாடு சர்க்காரில் செய்வார்களானால் தற்காலத்தில் குடிகளுக்கு உள்ள கஷ்டநஷ்டங்கள் அனேகமாய் நீங்குமென்றும், ஆகையினால் இந்த ஜில்லாவிலுள்ள காட்டு இலாக்கா உத்தியோகஸ்தர்கள் தங்கள் மலைக்காடுகளிலுள்ள புல்லை அறுத்து இந்தக் காக்ஷிசாலையில் கொண்டுவந்து வைத்திருப்பதானது தனக்கு மிகவும் சந்தோஷத்தை உண்டாக்குகிறதென்றும், ஆகையால் காட்டிலாகா உத்தியோகஸ்தரும் குடிகளும் இவ்விஷயத்தில் ஒற்றுமையாய் பாடுபட வேண்டுமென்றும் ஒங்கோல் ஜில்லாவில் கால்நடைவர்க்கவிர்த்தியிலும் கால்நடைத்தீவனம் சம்பாதிப்பதிலும் குடிகளுக்குள் ஒற்றுமையும் கூட்டுறவும் இருக்கவேண்டுமென்றும் பாபட்லா பக்கங்களிலும் மற்ற இடங்களிலும் ஜனங்களின் கூட்டுறவு சங்கங்களைப் பற்றி முயற்சிசெய்து வரும் ரெவரண்டு மிஸ்டர் தாம்ஸன்துரை அவர்கள் காக்ஷி சாலைக்குவந்து அவ்விஷயத்தைப்பற்றித் தக்க யோசனை சொல்லுவார் என்று நம்புவதாயும் இவ்விஷயத்தில் என்ன ஏற்பாடு செய்தபோதிலும் அவையெல்லாம் தகுந்தபடி வியாபார முறைமையில் செய்யப்பட வேண்டுமென்றும் சொன்னார்.

மேலும் தம்முடைய அபிப்பிராயத்தில் இந்தியர்கள் தொடர்ச்சியாய் பல வருஷங்களுக்கு விடாமுயற்சியுடன் யாதொரு காரியத்தையும் சிரத்தையுடன் செய்வதில்லை என்றும் ஏதோ ஒருகாலத்தில் ஆரம்பசூரத்துவத்துடன் முதல் வெகு ஊக்கத்துடன் வேலை செய்து பின் தம்முயற்சியைத் திடீரென கைவிட்டு விடுவது அவர்களுக்குச் சகஜமாய் இருக்கிறதென்றும் காலசுபிக்ஷக் குறைவு தொத்துவியாதி முதலிய இடையூறுகள் நேரிட்டபோதிலும் அவைகளுடன் மல்லுக்கட்டி மேல்வந்து இவ்வருஷத்தில் காக்ஷி நடத்துவதற்கு ஆகும் காரியங்களை நடத்திமுடிக்கும் விடாமுயற்சி வெகு முக்கியமான தெ

ன்று தான் சந்தோஷிப்பதாயும், டிஸ்டிரிக்ட்டுபோர்டார் இக்காக்ஷியை வருஷா வருஷம் நடத்த திரவ்வியசகாயம் செய்வது தங்களுடைய கடமை என உணர்ந்திருக்கும் விஷயம் தனக்கு மிகவும் திருப்திகரமானதென்றும் அவ்விஷயத்தைக்கவர்ன்மெண்டாரும் ஒப்புக்கொள்ளுவார்கள் என்பதற்கு சந்தேகமில்லை என்றும், இவ்வளவு காலத்திற்குப் பின்னாவது பைராகிமடத்தோப்பு நிலத்தை கால்நடைக்காக்ஷிக்காகவென்றே விலைக்குவாங்கி அவ்விஷயத்திற்கு வருஷா வருஷம் அதை உபயோகித்து வருவார்களென நம்புவதாகவும் இவ்வருஷத்தில் நடக்கும் கால்நடைக்காக்ஷி ஆரம்பம்முதல் முடிவுவரையில் சம்பளசெலவில்லாமல் கௌரவத்திற்குஉழைக்கும் உத்தியோகஸ்தர்களாலேயே நடத்தப்பட்டு வருகிறதென்பதைப் பார்க்க அவ்வுத்தியோகஸ்தரின் பெருந்தன்மையும் பொதுநலபிரியமும் வெளியாகிறதென்றும் சொன்னார். இக்காக்ஷியில் சேரும் கால்நடைகளின் விலை வெகுவாய் அதிகப்பட்டதென்னும் காரணத்தினால் இதைநிறுத்திவிடவேண்டுமென்றும் இரண்டுமூன்று வருஷத்திற்கொருதரம் வைக்கவேண்டுமென்றும் பலவித அபிப்பிராயங்கள் சிலருக்கு இருப்பதாக வெளியாகிறது. ஆனால் கால்நடைகளின் கிரயம் அதிகப்படுவதெல்லாம் அக்கால் நடைகளை வளர்ப்பவர்களுக்குலாபகரமாய் இருக்கிறதென்பதை உத்தேசித்து இக்காட்சியில் அனுகூலமிருக்கிறதாகவே நான் மதிக்கிறேன். ஆனால் காக்ஷிகளில் தங்கள் கால்நடைகளுக்கு அதிகக் கிரயம் கிடைக்கிறதென்பதை உத்தேசித்து கிருஷிகர் தங்களிடத்துள்ள மேன்மையான கால்நடைகளெல்லாவற்றையும் விற்றுவிடாமல் சிலவற்றை வர்க்கவிர்த்திக்கென்று தெரிந்தெடுத்து வைத்துக்கொள்ள வேண்டும். அப்படிக்கின்றி எல்லா நால்நடைகளையும் விற்றுவிட அக்கிருஷிகர் நிர்மூடரல்ல. ஒரு வருஷத்தில் எல்லா கால்நடைகளையும் விற்றுவிட்டால் மறுவருஷத்தில் விற்பதற்கு வேண்டிய கால் நடைகள் அபிவிர்த்தியாவது எப்படி? ஆகையால் வர்க்கவிர்த்திக்கு வேண்டிய கால் நடைகளை வைத்துக்கொண்டே மீந்தவைகளை விலைசெய்து வருவார்களென நான் நம்புகிறேன். மேலும் இக்காக்ஷி ஏற்பட்ட காரணத்தினால் குடிகள் முன்னிலும் அதிகமாய் கால்நடை விர்த்தி நடத்த தூண்டப்படுவார் என்பது திண்ணம். சிலர் ஒங்கோல் கால்நடைகளை அவைகளின் மாமிஸத்தைத் தின்பதற்காக அயல்தேசத்தார் வாங்கிச் செல்வதாய் அபிப்பிராயப்படுகிறார்கள். இது முற்றிலும் பிசகு. பிலிப்பயின்டச்சு கவர்ன்மெண்டார் எழுதி இருக்கும் பல நிருபங்களாலும் இக்கால்நடைகளை அவர்கள் வர்க்கவிருத்திக்காகவே வாங்கிப்போகிறார்களென்று நிச்சயமாக ஏற்படுகிறது. கடைசியாக கவர்ன்மெண்டாரால் தாம் பெற்ற கவுரதாபட்டத்தைப்பற்றிக் கால்நடைகாக்ஷி சபையார் தமக்குக் கூறிய முகமன் விஷயமாகக் குடிகளின் நன்மைக்காகத் தாம் சென்ற 31 வருஷகாலமாகச் செய்துவந்த பல காரியங்களும் அனேகருடைய உதவியைக்கொண்டு நடத்தியதால் தான் பட்டம் பெற்ற பெருமை பொதுவாகத் தனக்கு உதவிபுரிந்தவர்களுக்கும் உரித்தானதென்று சொல்லி முடித்தார்.

மிஸ்டர் காவில் ஸ்டுவேர்ட் ஸ்டுவேர்ட் துரையவர்கள், இந்தியர்கள் ஆரம்ப சூரத்துவத்துடன் முதலில் வேலை செய்கிறார்கள் என்றும், அப்பால் அவர்களுக்கு முதலிலிருந்த உற்சாகம் இருக்க இருக்கக் குறைந்து போகிறதென்றும் சொன்னது முற்றிலும் உண்மையாகையால், நாம் அதற்காக அவர் பேரில் வருத்தம் அடையக்கூடாது.

பயிர்களுக்குத் தண்ணீரின் உபயோகமும் வீண்செலவும்

THE USE AND ABUSE OF WATER IN PLANTS

செடிகளுக்கு அவைகளின் வேர்பக்கத்தில் தண்ணீர் இருக்கவேண்டியது அவசியம். அனேகமாய் மழையில்லாத வறண்ட இடங்களில் தானாய் முளைத்து வளரும் காட்டுச் செடிகளுக்குங்கூடத் தண்ணீர் அவசியம். தண்ணீர் இருக்கும் இடத்தைத்தேடி பூமிக்குள் ஆழமாய்த் தங்கள் வேர்களைச் செலுத்தக்கூடிய சக்தி அவைகளுக்கிருப்பதால்தான் அவைகள் ஜீவிக்க முடிகிறது. தண்ணீர் அகப்படாத இடங்களில் செடிகளின் வளர்ச்சி குறைவாகவும் தாமதமாகவுமிருக்கும். மேலும் கொஞ்சக்காலத்துக்குப் போதுமானபடி தண்ணீர் பாய்ச்சிப்பின் தண்ணீர் பார்ய்ச்சாமல் நிறுத்திவிட்டால் அவைகள் வாடி உருவங்குலைந்து போகின்றன. உடனே அவைகளின் குறை தீர்த்தாலன்றி அவைகள் மடிந்துபோகும் அபாயத்துக்குள்ளாகின்றன. சாகுபடி செய்யப்படும் பயிர்களுக்குத் (தண்ணீர்த் தட்டுண்டானால்) காலத்துக்கு முன் கூட்டியே அவைகள் பூத்துக் காய்த்துவிடும். அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் பயிரின் விளைவு வெகுவாய்க் குறைந்துபோவதுமன்றித் தானியத்தில் மணி பிடிக்காமல் பிரயோஜனமற்ற பதராயிருக்கும்.

செடிகளுக்குத் தண்ணீர் அநேக விதங்களில் உபயோகப்படுகிறது. முதலாவது, அது செடிகளுக்கு அவசியமான ஆகாரம். ஜீவஜந்துக்கள் தண்ணீர் குடிக்கவேண்டியது அவசியமென்று உங்களுக்குத் தெரியுமே. அவைகளைவிடச் செடிகளுக்குத் தண்ணீர் அதிக அவசியம். செடிகளில் அதிக பாகம் தண்ணீராகவேயிருக்கிறது. அவைகளுக்குப் போதுமான அளவுக்குத் தண்ணீர்பாய்ச்சவில்லையானால் அவற்றின் தண்டுகள் சத்தில்லாமல் கடினமடைந்து மரத்துப்போகும். செடிகள் தங்கள் ஆகாரத்தை ஜலரூபமாகவே அருந்தக்கூடும். பூமியிலிருந்து வேர்களுக்குள் புகும் தண்ணீரில் எப்பொழுதும் தாதுப்பொருள்கள் கரைந்திருக்கின்றன. இதுவே செடிகளின் வளர்ச்சிக்கு அவசியமான ஆகாரம். மேலும், இந்த ஆகாரம் அதிக நீராழமாய் இருக்கவேண்டும். (அதாவது கொஞ்சமான தாதுப்பொருள்கள் அதிகமான தண்ணீரில் கரைந்திருக்கவேண்டும்). இவ்விதமாக ஏராளமான தண்ணீர் இடைவிடாமல் அவைகளின் தண்டுகளின் வழியாய் இலைகளுக்குப் போய், அங்கிருந்து ஆவியாய் வெளியாகிறது. கடைசியாகச் செடிகளின் உருவம் குலையாமல் இருப்பதற்குத்தணணீர் அவசியம். அவைகளுக்கு அதிகமான தணணீர் விடாவிட்டால் (அவைகளின் இலைகளும் கிளைகளும்) தளர்ந்து தொங்கிக்கொண்டிருக்கும். அவைகள் தங்கள் இலைகளின்மேல் சூரிய ஒளி படும் விதமாய்ப் பரப்பிக்கொண்டிருக்க வேண்டியதற்கு அவைகளின் உள்ளே தண்ணீர் நிறைந்து வளையாமல் விரைப்பாயிருக்கவேண்டியபது அவசியம். செடிகளின் கிளைகள் விரிந்து படர்ந்திருக்கவேண்டியதுமன்றி அவற்றிலுள்ள புஷ்பங்கள் நன்றாய் விகசித்திருக்கவேண்டும். அப்படி

யிருந்தால்தான் அவைகளில் காய் பிடித்துப் பழுத்து விளைவடையும். இல்லையானல் அந்தப் பயிர் பலனற்றதாகும்.

செடிகளுக்குள்ள ஜலாதாரங்களிலெல்லாம் மழையே மேன்மையானது. வருஷம் முழுவதிலும் அனேகமாய் மழை பெய்யும் நாடுகளில், அதாவது மாதத்துக்கு ஒன்று அல்லது இரண்டு சரியான மழைகள் பெய்யும் இடங்களில், குளங்களாவது பாசனக் கால்வாய்களாவது பெரிய இறவைக் கிணறுகளாவது கிடையாது. உதாரணமாக மேற்கு இந்தியத் தீவுகளில் அப்படியிருக்கிறது. அவைகளில் சில தீவுகளில் சென்னையில் பெய்யும் மழைக்கு அதிகமாய்ப் பெய்வதில்லையாயினும், சுமாராய் அடிக்கடி மழைகள் பெய்யும். மேலும் அங்கே நீடித்த கோடை காலங்கிடையாது. இங்கிலாந்தில் அநேக பாகங்களில் சென்னையில் வருஷம் முழுவதுக்கும் பெய்யும் அளவு மழைகூடப் பெய்வதில்லை.

வாஸ்தவத்தில் கோயம்புத்தூரில் பெய்யும் வருஷ மழைதான் இங்கிலாந்திலும் பெய்கிறது. என்றாலும் அங்கே மழை கொஞ்சங் கொஞ்சமாய் பெய்யும். அதனல் ஆகாயம் குளிர்ச்சியாயிருக்கும். நிலத்தில் புல்முளைத்து எங்கும் பச்சென்றிருக்கும். ஆனல், ஓரிடத்தில் பெய்யும் மொத்தமழையின் அளவு அதிகமாயிருந்தாலும், அந்த மழை ஏறக்குறைய ஒரே காலத்தில் பொழிந்துவிட்டு ஒரு வருஷத்தில் நெடுநாளைக்கு மழையே பெய்யாமல் போகுமானல், பயிர்கள் சாகுபடி செய்வதற்கு நீர்ப்பாய்ச்சல் இல்லாமல் தீராது. இப்படி நீர்ப்பாய்ச்சுவதால் ஆச்சரியகரமான பலன் உண்டாகும். மஹா நதிகளிலிருந்து தொலைதூரமான இடங்களுக்குத் தண்ணீர்கொண்டு போகிறார்கள். பூமியின் மேற்பரப்பில் வழிந்தோடும் தண்ணீரைத் தடுத்து ஜாக்கிரதையாய்ச் சேர்த்துப் பெரிய குளங்களில் பெருக்கிக் கொள்ளுகிறார்கள். இதுவன்றியும், பாதாள ஊற்றுத் தண்ணீர் கிடைக்கக்கூடியதாக ஆழமான கிணறுகளையும் தோண்டுகிறார்கள். நாம் எங்கெங்கே இருந்தாலும் அங்கங்கெல்லாம் பூமிக்குள் (ஊற்றுத்) தண்ணீர் இருக்கிறது. போதுமான ஆழத்துக்குத் தோண்டினல் தண்ணீர் அகப்படாமல் போகாது.

ஆனல் நீர்ப்பாய்ச்சலுக்கு ஏற்பட்ட பிரதிகூலங்களும் உண்டு. மேக மண்டலத்திலிருந்து அமைதியுடன் (நிஸ்ஸப்தமாய்) இறங்கும் மழைக்குப் பாய்ச்சல் தண்ணீர் நிகராகமாட்டாது. முதலாக, ஜீவஜெந்துக்களைப்போலவே செடிகளுக்கும் அடிக்கடிக் குளித்தல் (உடம்பு கழுவுதல்) அவசியம். இல்லையானல், செடிகளின் இலைகள் மேல் தூசுபடிந்து அவைகளுக்கு மூச்சு முட்டிப் போவதுமன்றி, பூச்சி புழுக்கள் பலுகிப் பெருகிச் செடிகளுக்குப் பிராணபயத்தை விளைக்கும். மழை பெய்து செடிகளைச் சரியாய்க் கழுவிவிட்டால் பூச்சி புழுக்கள் அதிகமாய் விர்த்தி யடைய மார்க்கமிருக்காது. இரண்டாவது நீர்ப்பாய்ச்சும்போது நிதானமில்லாமல் அதிகத் தண்ணீர் பாய்ச்சுவதினல் எப்பொழுதும் கெடுதியுண்டாகக்கூடியதாகவே யிருக்கிறது. நெற்பயிரானலுங்கூட, ஒரு பயிரின் விளைவுக்கு வாஸ்தவத்தில் எவ்வளவு குறைந்த தண்ணீர் போதுமானதென்று இந்த தேசத்துக் கிருஷிகர் அறிந்துகொள்ளவில்லை. இவ்வளவு காலமாய் அவர்கள் ஒரு பயிருக்கு எவ்வளவு அதிகமான தண்ணீர் பாய்ச்சினல் பாதகமிருக்காதென்று கண்டுகொள்ளப் பிரயாசப்படுவதாகத் தோன்றுகிறது. பயிர்கள் அழுகி அழிந்துபோகாமல் அவைகளுக்கு எவ்வளவு அதிகமான தண்ணீர் பாய்ச்சலாம் என்பதைக் கவனித்தால் அது ஆச்சரியத்தையுண்டாக்கும். இந்துதேசத்துக் கிருஷிகர் நீர்ப்பாய்ச்சல் வெகு நல்லதென்றும் பயிர்கள்

சரியானபடி விளைவடைய அது அவசியமானதென்றும் கண்டுகொண்டதால், எவ்வளவுக்கு அதிகமான தண்ணீரை உபயோகிக்கிறார்களோ அவ்வளவுக்கு அதிகமான விளைவுகிடைக்கும் என்று தீர்மானம் கொண்டிருக்கிறார்கள்போலும். ஆனால் இந்த அபிப்பிராயம் சரியானதல்ல. போதுமான அளவுக்கு அதிகமான தண்ணீர் பாய்ச்சினால் மண்ணிலிருந்து காற்று வெளியே போக்கப்படுகிறது. நிலத்தில் அதனால் நீர்ப்பிடிப்புண்டாகிறது. இதனால் எண்ணிறந்த நோய்கள் பயிர்களுக்குண்டாகின்றன. இந்தநோய்கள் முக்கியமாக காளான் (Fungus)போன்றவைகள். உதாரணமாக சென்னை இராஜதானியில் பயிராகும் கரும்புப்பயிரில் உண்டாகும் நோய்களில் அனேகம் அதிகமான பாய்ச்சல் தண்ணீரினால் உண்டாகிறது. நிலத்துக்கு நீர்ப்பாய்ச்சுவது எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியமானது அதிலிருந்து நீர்வடியச்செய்தல். நீர்ப்பாய்ச்சுவதுடன் சரியான நீர்வடிவும் கூடவே இருக்கவேண்டும். நீர்வடிந்து போகக்கூடாத பள்ளத்தாக்கு நிலங்களுக்கு அதிஜாக்கிரதையுடன் நீர்ப்பாய்ச்சவேண்டும்.

கடைசியாக நீர்ப்பாய்ச்சலால் உண்டாகும் கெடுதிகளில் மிகவும் முக்கியமானது எதுவெனில் நிலங்கள் அதனால் உவர்நிலமாவதுதான். நிலங்களில் அனேக வருஷங்களுக்கு நீர்ப்பாய்ச்சிக் கொண்டிருந்தால் அதில் சிலசமயங்களில் கெடுதியுண்டாக்கும் அனேகவித உப்பு நிறைந்து அவைகளைப் பயிரிடுவதற்கு உபயோகமில்லாமல் செய்துவிடுகின்றன. நீர்வடிவு சரியாய் நடத்திவந்தால் நிலங்கள் களர் ஆவதைத்தடுக்கலாம். ஆனால் இதை அசட்டைசெய்வார்களானால் நிலத்தை மறுபடி சீர்திருத்துவதற்கு வெகு காலஞ்செல்லும்.

தோட்டக்கால் சாகுபடியில் கிணற்றிறவை உடையவர்களும் நன்செய் சாகுபடி செய்யும் கிருஷிகரும் இவ்விஷயங்களைச் சிந்திக்க வேண்டும்.

சி. ஏ. பார்பர்,
கவர்ன்மெண்ட் பாடனிஸ்ட்.

பயிர் மாற்றல்

ROTATION OF CROPS

(இந்திரசபா வர்ணமெட்டு)

1. பண்ணைநிலம் பயிர்மாற்றல்செய் பாங்கினைப்பாரும்;
மண்ணின்பயி ருணவுமட்டாய் மாறிச்செலவாகும்.
2. மனிதர்நாளும் உணவருந்தி வளர்வதுபோல,
தினமும்பயிர் மண்ணுணவைத் தின்று வளருமே.
3. பலபயிர்க்குப் பலபொருட்கள் பயன்படுமுணவாம்;
சிலபயிர்க்குச் சிலபொருட்கள் சிறிதும் பயன்படா.
4. கத்தரியுங் கனமிளகாய் காரப்புகையிலை
சத்துமிகுஞ் சாம்பற்காரஞ் சதாவுண்ணுமே.
5. கம்புசோளங் கோதுமைநெல் கதிர்த்தானியங்கள்,
அம்புவியில் பிரகாசிதம் அதிகம் அருந்துமாம்.
6. காராமணிக் காணங்கடலைக் காய்த்தானியங்கள்
ஏராளமாய்ச் சுண்ணும்பையே எடுத்துக்கொள்ளுமாம்.
7. இவ்வகையில் இட்டபயிர் இயற்கையாகவே
ஒவ்வொன்றுமே ஒருணவை உறிஞ்சியுட்கொள்ளும்.

8. ஒருபயிரை யொருநிலத்தில் ஓயாமலிட்டால்
ஒருவகையாம் உணவுமட்டும் ஓயாமற்செலவாம்.

9. நிலத்திற்பொருள் நிறைநிதான நேர்மைநீங்கிடில்
பலன்தராது பல்லாண்டினிற் பாழ்நிலமாமே.

10. புன்செய்நன்செய் பஞ்சமெனப் புகல்வதினாலே,
கன்சமாக்கிக் கால்மாற்றிக்கை கழிப்பதினாலே.

11. பயிர்மாற்றுவதால் பண்ணைவளங் குன்றாதுபாரும்;
உயிரைப்போன்ற பயிருணவொவ் வொன்றுமிருப்பதால்.

12. மக்காச்சோளம் வாழைவாகு மஞ்சட் கரும்புமே
சிக்கெனமண் சத்தைநீக்கி சீர்கெடுக்குமே.

13. இப்பயிர்கட் கேராளமாய் எருவிடவேண்டும்
எப்போதுமி தின்செலவோ எண்ணவொண்ணாதே.

14. பயிர்மாற்றில் எருவிடுதல் பாரிலே எளிதாம்;
இயற்கையிலே வளம்பெருகில் எருவிடலேனோ?

15. ஆணிவேர மைந்தபயி ரடிமண்ணைத்தின்னும்;
பேணியுண்ணுங் கொத்துவேர்கள் பிறக்குமேல்மண்ணை.

16. கோதுமைநெல் கதிர்த்தான்யம் கொத்துவேர்களால்
ஓதும்சத்து ருஞ்சிமண்ணை ஓயச்செய்திடும்.

17. காராமணி கடலைமொச்சை காய்த்தானியங்கள்
வேராழமாய் விட்டேமண்ணை விருத்திசெய்திடும்.

18. இவ்விதத்தில் ஒரு பயிரால் இழந்திடுஞ்சத்தைச்
செவ்விதாக மறுபயிரால் செய்திடக்கூடும்.

19. பயிர்மாற்றினால் பண்ணைதனில் பலபயிர்நிற்கும்
வெயில்மழையால் ஒன்றுகெடில் விளையும்வேறொன்றே.

20. அவற்றிலொன்று கால்நடைகட் காகாரமாகும்
தவறில்தழை எருவிடவே தக்கதுமாகும்.

21. ஒருபயிரில் ஒருவிதநோய் ஒட்டியிருக்குமாம்
தருகும்நோயைத் தடுத்துக்கொள்ளும் தகுபயிர்மாற்றில்.

22. சிலபயிரில் களைகள்மிகச் செறிந்துசேருமாம்;
நிலத்திற்பயிர் மாற்றிற்களை நெருங்கிச்சாகுமாம்.

23. தாறுமாறாய்ப் பயிர்மாற்றல் தக்கதல்லவே;
சீரொழுங்காய் சிரத்தையொடு செய்யவேண்டுமே.

24. இடமுங்காலம் இருநிலத்தின் இயல்பும்மழைகள்
தடமுந்தாங்கல் தண்ணீருக்குத் தக்கமாற்றலாம்.

25. கதிர்த்தான்யங்கள் நிகழ் வருஷத்தில் கழனியிலிட்டால்
எதிர்வருஷத்தில் ஏதேனுங்காய்த் தான்யமியற்றிடலாம்.

26. அடுத்துத்தைல வித்துப்பயிர் ஆக்கியபின்னர்
மடித்துச்சோள நாற்றுப்பயிர் மாற்றிடலாகும்.

27. பல்லாண்டாகப் பயிர்செய்தாலும் பலன்குறையாதே
எல்லோரும்யாம் இயம்பும் முறையை ஏற்றுக்கொள்ளுவீர்.

1910-மார்ச்சுமீ 10௳ }
திருவள்ளூர். } J. DHARMARANGA RAJU.

பங்குனிமாசத்திய பருவங்கள்

THE MONTH'S OPERATIONS

செங்கல்பட்டு ஜில்லா.--தண்ணீர் இருக்கும் சில பெரிய ஏரிகளின் ஆயக்கட்டிலும் கிணறுகளின் கீழும் பிச்சவாரி அல்லது போசனம் நாற்று இப்போது நடலாம். அவுரி, எள்ளு, வேர்கடலை இவைகளையும் விதைக்க இது தருணம். கேழ்வரகு மிளகாய்ச்செடி இவைகளைச் சீக்கிரம் நட்டு முடிக்கவேண்டும்.

தென் ஆற்காடு ஜில்லா.—கேழ்வரகு புகையிலை இந்தப்பயிர்களின் நடுகை இந்தமாதம் முடிவாகும். வேறுபயிர்கள் செய்ய இயலாது.

வட ஆற்காடு ஜில்லா.—இந்த ஜில்லாவில் அவ்வளவு அதிகமான தண்ணீர்த்தட்டு இல்லை. சில இடங்களில் நெல் விதைப்பும் நடுகையும் கேழ்வரகு நடுகையும் செய்யக்கூடும்.

சேலம் ஜில்லா.—சில இடங்களில் நெல், சோளம், கேழ்வரகு, எள்ளு, இவைகளின் விதைப்பும் நடுகையும் நடத்தலாம்.

கோயம்புத்தூர் ஜில்லா.—பவானிநதியில் சில தினங்களுக்கு முன் கொஞ்சம் அதிக தண்ணீர் வந்ததாகத் தெரியவருகிறது. சில இடங்களில் நெல்லும் சோளமும் விதைக்கலாம்,

திருச்சினுப்பள்ளி ஜில்லா.—இந்த ஜில்லாவிலும் தண்ணீர்த்தட்டு அதிகம், சில இடங்களில் நெல்லும், சில இடங்களில் எள்ளும், மற்றும் சில இடங்களில் அவுரியும் இப்போது விதைப்பார்கள்.

தஞ்சாவூர் ஜில்லா.—சிற்சில இடங்களில் நெல்லும், எள்ளும் விதைக்கக்கூடும். வேறு சாகுபடி செய்ய சாத்தியப்படாது.

மதுரை ஜில்லா.—இந்த ஜில்லாவின் சிலபாகங்களில் தண்ணீர்த் தட்டு அதிகமாக நேரிடவில்லை. பேரணி தலைமதகில் கொஞ்சம் தண்ணீர் இன்னும் போய்க்கொண்டு இருக்கிறது. நெல் நடுகையும் சோளவிதைப்பும் சில இடங்களில் செய்யக்கூடும்.

திருநெல்வேலி ஜில்லா.—அனேக இடங்களில் தண்ணீர்த்தட்டு மிகவும் அதிகம். சில இடங்களில் தைச்சோளம் விதைத்து முடிவாகும். தென்காசி முதலான தாலூக்காக்களில் சித்திரைச்சோளம் விதைக்க நிலம் பருவம் செய்யலாம்.

குறிப்புகள்

NEWS AND NOTES

சில நாட்களுக்குமுன் ஒங்கோலில் நடத்தப்பட்ட கால்நடைக்காக்ஷிக்குக் கொண்டுவந்திருந்த கால்நடைகளின் போஷணைக்காகச் சர்க்காரிலிருந்து கிருஷிகருக்கு இனமாகக் கொடுப்பதற்கென்று சோளதாத்து சேகரித்து வைத்திருந்தது. அங்கு வந்திருந்த கிருஷிகரில் சிலருக்குத் தீவனம் கொஞ்சம் கொஞ்சமாய் கொடுக்கப்பட்டதாகவும் அந்தக் காரணத்தால் சிலர் அதிகத்தீவனம் வேண்டுமென்று முரண்செய்து கலகம் செய்ய எத்த

ணித்ததாகவும் அத்தருணத்தில் அனேக கிருஷிகர் தீவனக்கட்டுகளை உத்திரவின்றியே எடுத்துக்கொண்டு போய்விட்டதாகவும் சர்க்கார் உத்தியோகஸ்தர் அதைத் தடுக்க முயன்றதில் சென்ற வருஷம் கோட்டப்பகொண்டா உற்சவத்தில் உண்டானதைப்போன்ற பலத்த கலகம் நடக்க ஏதுவாயிருந்ததாகவும் அப்பொழுது போலீஸ் அதிகாரிகள் மிக ஜாக்கிரதையாயும் அவசரப்படாமலும் சாமர்த்தியத்துடனும் காரியம் சாதித்ததால் கலகம் நடக்காமல் தடைப்பட்டதாகவும் அறிகிறோம். இந்த ஜில்லாவில் மழைக்குறைவினால் நாற்றுச் சோளப்பயிர் அதிகமாய் நஷ்டமடைந்ததால் இப்படிக் கலகம் நடக்க ஏதுவாயிருந்ததென்று நாம் நம்புகிறோம்.

சென்ற மாதத்தில் எல்லூரில் நடந்த கால்நடை விவசாய காக்ஷியில் சில விபரீதங்கள் நேரிட்டதாக அறிகிறோம். அந்தக் காக்ஷி சபையார் பிரசுரம் செய்த விளம்பரப் பத்திரிகையில் முதல்தரமான கால்நடைகளுக்குப் பரிசு ரூபா 50 என்றும் தாழ்ந்த தரமுள்ள பரிசுகள் ரூபா 25 என்றும் வெளியிடப்பட்டிருந்ததாம். அதனாலே ஒங்கோல் காக்ஷிக்குச் சென்றிருந்த பலர் அங்கிருந்து தங்கள்கால்நடைகளை எல்லூருக்குக்கொண்டுபோய் நிறுத்தியதாகவும் அவைகளில் அனேக கால்நடைகளுக்குப் பரிசு கொடுக்கப்பட்டபோதிலும் நோட்டீசில் கண்ட தொகைகள் கொடுக்கப்படவில்லை என்றும் இதனால் கிருஷிகரில் அனேகருக்கு அதிர்ப்த்தி உண்டாயிற்றென்றும் தெரியவருகிறது. காக்ஷி சபையார் தங்கள் வரவுக்கேற்ற பரிசுகளைக் குறிப்பிட்டிருந்தால் இப்படி நேரிட்டிருக்காது.

எல்லூர் காக்ஷிசாலையில் சென்ற மார்ச்சு மாசம் 1௳ அன்று காலை விவசாய இலாகா உத்தியோகஸ்தர்களால் சில விவசாயக் கருவிகளைக்கொண்டு வேலை நடத்திக் காட்டப்பட்டது. இதைக் கண்ணுற்ற பல கிருஷிகர் விவசாய சம்பந்தமான பற்பல விஷயங்களைப்பற்றி அவ்வுத்தியோகஸ்தரைக் கேட்டுச் சமாசாரம் தெரிந்துகொண்டார்கள். விவசாய காக்ஷியில் நடத்தவேண்டிய முக்கியமான விஷயங்களில் இதுவும் ஒன்று.

கிராமப்பள்ளிக்கூடங்களை ஒட்டிச் சிறு தோட்டப்பண்ணைகளை ஸ்தாபித்து அவைகளில் பள்ளிப்பிள்ளைகள் பயிர்செய்யும் முறைகளைக்கவனித்துக் கற்றுத் தேர்ச்சியடையவும் இதனால் அவர்களுக்குப் புத்திகூர்மையும், அறிவு விசாலமும், காரணகாரிய விவேகமும், லோக வியாபாரங்களில் அனுபோகமும் உண்டாகக் கூடுமென்றும் நினைத்து இவ்விதமான பண்ணைத்தோட்டங்களை ஸ்தாபிப்பதைப்பற்றிக் கவர்ன்மெண்டார் யோசித்துக்கொண்டிருக்கிறார்கள்.

சிங்கப்பூர், பீச்ரோட் கல்லாலைக்குச் சமீபத்தில் ஓர் வாழைமரம் சுமார் எட்டு அடி உயரமிருப்பதாகவும் அதினின்றும் விட்ட தாரானது பூமிக்குக் கீழ் பள்ளந் தோண்டி விடப்பட்டிருப்பதாகவும் இன்னும் பூ உதிரவில்லையென்றும் இந்த அதிசயத்தை நித்யம் ஏராளமான ஜனங்கள் வந்து பார்த்துப்போவதாகவும் அறிகிறோம். இது மோரீஸ்வாழை யென்று சொல்லும்குள்ள வாழையாயிருக்கவேண்டும். இது நட்ட இடத்தில் முன்னால் பெரிய பள்ளம் தோண்டப்பட்டிருக்க வேண்டுமென்றும், அதில் இந்த ஜாதி வாழைக்கு வேண்டிய சமைந்த பயிருணவு ஏராளமாய் இருந்திருக்குமென்றும், இத்துடன் அதற்கு வேண்டிய அளவு தண்ணீரும் விடப்பட்டிருக்குமென்றும், ஆகையால் அது சாதாரணமாய் $4\frac{1}{2}$ அடி உயரம் வளருவதற்குப் பதில் 8 அடி உயரம் வளர்ந்திருக்குமென்றும், போஷாப்புக் கேற்றபடி குலையும் வளமாய் போட்டிருக்குமென்றும் நினைக்கிறோம்.

இனிய தமிழ் நாவல்கள்

	ரூ.	அ.
ஜடாவல்லவர் முதற்பாகம்	0	8
ஷை இரண்டாம்பாகம்	0	10
(இரண்டுபாகமும் சேர்ந்து)	1	0
விஜயலெட்சுமி	0	10
சீதாராம்	1	0
வசீகரி	1	0
சுசீலா	1	0
மங்களாம்பாள்	0	8
ஞானாம்பாள்	0	6
சுப்பிரமணிய தோத்திரக்கொத்து உருவப்படத்துடன்	0	3
ராஜாம்பாள்	0	12
சந்திரகாந்தா	0	12
பவானந்தர்	0	8
சந்திரசேகரன்	0	8
ஆனந்தமடம்	0	8
போஜசரித்திரம்	1	8
புருஷோத்தமன்	0	10
மங்கைக்கரசி	0	12
சுந்தரன்	0	12
லீலா	0	12
சாரதாம்பாள்	0	8
வத்ஸலா	0	8
வசந்தசேனை	0	4
கண்மணி	0	3
பிரேமகலாவதீயம்	0	12
கமலனீகலஹம்சம்	0	8
குணசீலன்	0	10
வாசந்திகா	0	8
காமாக்ஷி	0	8
பங்கஜாக்ஷி	0	8
அழகம்மாள்	0	12
ரத்தின விமானம்	0	12
தாருகா காசவம்	0	14
பிரதாபமுதலியார் சரித்திரம்	1	0
சுந்தரிமனோகரன்	0	12
விவேகாநந்த ஸ்வாமி உபந்நியாசம் முதற்பாகம்	0	8
ஷை இரண்டாம் பாகம்	0	8
பகவத்கீதை (3 பக்ஷியம்)	1	0
பகவத்கீதை (பாராயணம்)	0	8

	ரூ.	அ.
சிவராத்திரி புராணம்	1	4
சுகதேவி	0	8
விவேகாநந்த விஜயம்	1	4
சபளா	0	8
அரிச்சந்திரன்	0	8
திருலோக மோகனாங்கி	1	4
லெக்ஷிமி	0	8
ஆனந்தசுந்தரி	0	12
மாலிகாபூஷணி	0	10
கனகவல்லி	1	0
தமயந்தி	0	9
அநுமான்சிங்	0	12
பழமொழி	0	2
லலிதா	0	10
மகாராணி சரித்திரம்	1	0

மகா-ள-ள-ஸ்ரீ, ப. சம்பந்த முதலியார் B.A.B.L. இயற்றிய

	ரூ.	அ.
லீலாவதி சுலோசனை	0	12
மனோகரன்	0	12
இரண்டு நண்பர்கள்	0	12
சத்ருஜித்	0	12
காதலர் கண்கள்	0	12
கள்வர் தலைவன்	0	8
யயாதி	0	8
சாரங்கதரன்	0	8
வேதாள உலகம்	0	8
காலவரிஷி	0	8
ரத்னாவளி	0	8

பண்டித நடேச சாஸ்திரியார் இயற்றிய

	ரூ.	அ.
தீனதயாளு	0	8
மதிகெட்ட மனைவி	1	0
மாமி கொலுவிருக்கை	0	8
தலையணை மந்திரோபதேசம்	0	8
கோமளம் குமரியானது	0	12
திக்கற்ற இருகுழந்தைகள்	1	2
முத்திரா ராக்ஷஸம்	0	4
மிருச்சகடி	0	4
வேணிசம்ஹாரம்	0	3
ஷேக்ஸ்பியர் நாடககதைகள்	0	6

விலாஸம் :—

எஸ். ஜி. ஐயர் அண்டு கம்பெனி,

திருவல்லிக்கேணி.

ஆனந்த ராமாயணம்

இதுவும் வான்மீகி மகாரிஷியால் வடமொழியில் எழுதப்பட்டது. இதைத் தமிழில் மொழிபெயர்த்துப் பன்னிரண்டு சஞ்சிகைகளாக வெளியிடுகிறோம். இதில் வான்மீகி ராமாயணத்தில் இல்லாத அனேக விஷயங்கள் அடங்கியுள்ளன. ஸ்ரீராம லக்ஷ்மணருடைய ஜனனமும் வளர்ப்பும், சீதா தேவியினுடைய ஜனனமும், அத்தேவிக்குப் பலபெயர் வந்ததற்குக் காரணமும் விளக்கி யிருப்பது படிப்பதற்கு வெகு இனிமையா யிருக்கும். ஆனந்த ராமாயண மென்ற இதன் பெயருக்கொத்தபடிப் படிப்போர் மனதிற்கு உற்சாகமும் ஆனந்தமும் உண்டாக்கு மென்பதில் தடையில்லை. இதுவரையில் தமிழ்ப்பாஷையில் வெளிவராதது. ஆகையால் நமது அபிமானிகள் ஒவ்வொருவரும் வாங்கி வாசித்துப் பயன்படும்படிக் கேட்டுக்கொள்ளுகிறோம். இப்புஸ்தகம் ஒன்பது காண்டங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது.

காண்டங்களின் விவரம்.—1. ஸாரகாண்ட,ம் 2. யாத்ராகாண்டம், 3 யாககாண்டம் 4. விலாஸ காண்டம், 5. ஜன்ம காண்டம், 6. விவாக காண்டம், 7. ராஜ்ய காண்டம், முதல்பாகம், இரண்டாம்பாகம், 8. மனோகர காண்டம், 9. பூரணகாண்டம். ஒவ்வொரு சஞ்சிகையிலும் சித்திரபடமொன்று அமைத்து வெளியிடப்படும். சந்தா விவரம்:—

பத்து பாரம் கொண்ட சஞ்சிகை ஒன்றுக்குச் சந்தா	0	6	0
மூன்று மாதத்துக்கு	1	0	0
தபாற் கூலி வேறு.			

இப்புத்தகம் பன்னிரண்டு சஞ்சிகையில் முடிவாகும்.
3-வது சஞ்சிகைகள் வெளியாய்விட்டன.
வேண்டுவோர் கீழ்கண்ட விலாசதாருக்கு எழுதி ரிஜிஸ்தர் செய்து கொள்ளவும்.

ஸ்ரீமத் பாகவதம்

ஸ்ரீமத் பாகவதமானது சதுர்வித புருஷார்த்தங்களுள் பிரதானமான மோக்ஷ சாம்ராஜ்யப்பேறு பெறுவதற்கு இன்றியமையாத சாதனமாகிய பகவத்பக்தி புகட்டத்தக்க அரிய நூலென்பது யாவரும் அறிந்த விஷயம். இத்தகைய கிரந்தம், தமிழ், சமஸ்கிருதாபிமானிகளாகிய நம்மவர் ஒவ்வொருவர் கிருகத்திலுமிருப்பது அவசியமென்பதை யுத்தேசித்து ஸ்ரீதரீய வியாக்கியானத்துடன் மூல சுலோகமும், அந்த மூலத்துக்கேற்பத் தமிழ் மொழிபெயர்ப்பும் அச்சிட்டு, சஞ்சிகைரூபமாக வெளிப்படுத்த முதலில் தசமஸ்கந்தத்தை ஆரம்பித்தோம். இப்பொழுது 7-சஞ்சிகைகள் வெளியாயிருக்கின்றன. ஒரு சஞ்சிகை ராயல் 10-பாரங்கொண்டது (80-பக்கம்). ஒவ்வொரு சஞ்சிகையிலும் சித்திரபடமொன்று அமைக்கப்பட்டிருக்கும்.

சந்தா விவரம்

மாதம் 1-க்கு 0-7-0. மூன்று மாதத்திற்கு 1-4-0. தபாற் கூலி வேறு.

எ. வி. ஐயர் அண்டு கம்பெனி,
79, பெரியதெரு திருவல்லிக்கேணி,
சென்னை.

A. V AIYER & Co.,
Book Sellers & Publishers,
Triplicane, Madras.

நோட்டீஸ்

ஒவ்வொரு தமிழ் மாதம் முதல் தேதியிலும் தவறாமல் நமது பத்திரிகை யனுப்பப்படுகிறபடியால், "கிருஷிகன்" சந்தாதார்களில் எவராவது தமிழ் மாதம் ஐந்தாம் தேதிக்குள் பத்திரிகை பெறாவிட்டால், பத்திரிகை பிரசுரமாகிவிட்டதோ இல்லையோ என்னும் சந்தேகமடையாமல் உடனே கிருஷிகன் மானேஜருக்குப் பத்திரிகை சேராத விஷயம் தெரிவித்தால் அந்தந்தத் தபாலதிகாரிகளுக்கு எழுதி விசாரிக்கும்படி செய்வதுடன் வேறு பத்திரிகையுமனுப்பப்படும்.

சந்தாதாரர்கள் நமக்குக் கடிதம் எழுதும்போதெல்லாம் தயவுசெய்து விலாசத்தின்மேல் எழுதியிருக்கும் நம்பரைக் குறிப்பிட்டு எழுதவேண்டும். அச்சடித்திருக்கும் Register No. M. 801 என்பதை எழுதிவிடக்கூடாது என்பதைக் கவனிக்கக் கோருகிறோம்.

"கிருஷிகன்" சித்திரை, ஆடி, ஐப்பசி மாதங்களின் சஞ்சிகைகள் செலவாகிவிட்டதால் இனிமேல் இவ்வருஷத்தில் சேரும் சந்தாதாரர்களுக்கு இம் மூன்று பிரதிகளும் கொடுக்கமுடியாது. எழுதிய கடிதங்களுக்குப் பதில் கிடைக்கவேண்டுமானால் ரிப்ளை கார்டாவது ஸ்டாம்புகளாவது அனுப்பவேண்டும்.

மானேஜர்.

கிருஷிகன்

மாதந்தோறும் பிரசுரமாகும் ஓர் விவசாயப்பத்திரிகை. ஷை பத்திரிகையானது விவசாயத்தில் அனுபோகமும் பாண்டித்யமுமுள்ளவர்களால் எழுதப்பட்டு வருகிறது. ஒவ்வொருவரும் வாங்கி வாசித்து நமது தேசத்து விவசாயம் விருத்தியடையவேண்டும் என்னும் எண்ணத்துடன் காகிதக்கிரயமும் அச்சுக்கூலியும் தபால் செலவும் மாத்திரம் கிடைக்கும்படிக்கான குறைந்த சந்தா வைக்கப்பட்டிருக்கிறது. ஒரு வருஷத்திற்குக் குறைந்த சந்தா அங்கீகரிக்கப்படமாட்டாது. ஒவ்வொரு வருஷமும் சித்திரைமீ முதல் ஆரம்பமாகிறது. கடந்த சஞ்சிகைகளைக் கூடுமானவரையில் சப்ளை செய்யப்படும்.

சந்தா விபரம்	ரூ.	அ.	பை.
இந்தியா, பர்மா, சிலோனுக்கு மாத்திரம் தபாற்கூலி உள்பட வருஷம் ஒன்றுக்கு	0	12	0
வி. பி. கமிஷன் அணா 1-பிரத்தியேகம்.			
தனிப்பிரதி	0	2	0

மற்ற அயல்தேசங்களுக்குத் தபால்கூலி மாத்திரம் பிரத்தியேகம்.

வேண்டியவர்கள்

ரங்கராஜு அண்டு பிரதர்ஸ்,
5, மௌண்ட்ரோட், சென்னை

என்று எழுதி வி. பி. மூலமாய்ப் பெற்றுக்கொள்ளலாம்.

உயர்ந்த நான்கு தங்கப் பதக்கங்களும் முதல்தரமான
அனேக யோக்கிதாபத்திரங்களும் வெகுமான மளிக்கப்பட்டன.

ஆயுர்வேதமார்த்தாண்ட, பிஷங்மணி,

பண்டித டி. கோபாலாசார்யர், எ.வி.எஸ்.

அவர்களால் சாஸ்திர முறைப்படி நேரில் தயார் செய்யப்பட்ட
ஆயுர்வேத அவுஷதங்கள்.

1. கேசப்பிரசாதனதைலம்.-- கூந்தலை விருத்தி செய்யத்தக்கது. நல்ல சுவாஸனையுள்ள தைலம். கண்களுக்குக் குளிர்ச்சியை யுண்டாக்கக்கூடியது. ஒரு புட்டியின் விலை ரூ. 1—0—0.

2. அசோகவடி.— ஸ்திரீகளுக்கு மாதந்தோறும் பகிஷ்டை செம்மையா யுண்டாகாதிருத்தலையும், பகிஷ்டையாகும் சமயத்தில் ரஜஸ் அதிக வெள்ளமாய்ப் போதலையும், வயிற்றுவ்வலி, காலெரிவு முதலிய ஸ்திரீகளின் வியாதிகளைக் கண்டிப்பதில் அமிருத சஞ்சீவினிபோன்றது. புட்டி 1-க்கு விலை அணு. 12.

3. பிரமேக பஞ்ஜனி எனும் மதுமேக மூத்ரசங்காரி.—மதுமேகமென்னும் மூத்திரத்தையும், நெடுங்காலந் தொடங்கி மூத்திரமார்க்கத்திலிருந்து சரவிக்கும் சுக்ல நஷ்டம் முதலிய காரகங்களை நிவர்த்தி செய்யும். (புட்டி 1-க்கு விலை ரூபா. 2—8—0.)

4. ச்யவனப்பிராஸன.—உப்பஸம், க்ஷயம், சாதாரணமான இருமல், தொண்டை, ஸ்வாஸக்குழாய்களின் ஸம்பந்தமான எல்லாவிதமான துர்க்குணங்களுக்கும் அபூர்வமானது. காட்லீவர் எண்ணெயினுல் குணமாகாத வியாதிகளெல்லாவற்றையும் சௌக்கியப்படுத்தும். (டின் 1-க்கு விலை ரூபா 2—8—0.)

5. ரத்தசோதக.—கெட்ட இரத்தத்தைச் சுத்திசெய்யும், உடம்பிலிருக்கும் சொறி, சிரங்கு, மஞ்சகாமாலை, வாதத்திலுண்டாகும் வலி இவைகளை நிவர்த்திசெய்யும். (புட்டி 1-க்கு விலை ரூபா 2—8—0.)

போஸ்டேஜ் பாகிங் முதலிய செலவு பிரத்தியேகம்.

N. B.—இன்னும் இதரபேடெண்டு சாஸ்த்ரீக மருந்துகளும் அவைகளின் காட்லாக்குகளும் கடிதமெழுதுவோர்க்கு இனாமாயனுப்பப்படும்.

டெலிக்ராம் அட்ரஸ் "பண்டிட் மதிராஸ்."

☞ **ஆயுர்வேதாச்சிரமம்,**
55, ஆசாரப்பன் தெரு,
ஜார்ஜ் டவுன், சென்னை.

P. SUBBA ROY'S

Wonderful Auyurvedic Medicines.

பி. சுப்பராய், பரங்கிப்பேட்டை,

தென்னாற்காடு ஜில்லா.

தயவுசெய்து தங்கள் சினேகிதர்களுக்கு வாசிக்கக் காண்பியுங்கள்

பி. சுப்பராயின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்.

1. "தாதுபுஷ்டி மருந்து".—அதன் குணத்தை எழுதி முடியாது
அனுபோகத்தால் தெரிந்துகொள்ளலாம். தாது நஷ்டம், பலஹீனம், ஆ
குறி துவளல், பசியின்மை, கண், கால் எரிவு, தேகவரக்ஷி, சீக்கிரத்தில் ஸ்
தம், சொப்பன ஸ்கலிதம், கை, கால், இடுப்பு முதலிய அவயவங்க
சோர்வு, வலி, சோம்பல், மேகச்சூடு, பாண்டு, சோகை, மேகவெ
வெட்டை, நீரிழிவு, மதுமேகம், சதையடைப்பு, இன்னம் பற்பல
ரோகங்களைப் போக்கும். சரீரபுஷ்டி, புருஷத்தன்மை, போ
ஜீரண சக்தி, அபரிமிதமான தாதுவிருத்தியை யுண்டாக்கும்.
கும் இந்திரியத்தைக் கெட்டிப்படுத்தி போகசக்தியை அதிகரிக்கும்
1-க்கு விலை ரூபா 2. வி. பி. செலவு அணா 5-பிரத்தியேகம்.

2. "அக்கினி மாந்தத்திற்கு மருந்து".—பசியின்மை, புளி
நெஞ்செரிச்சல், மலச்சிக்கல், வயிற்றுவலி, வாய்நாற்றம், அஜீ
ருப்பிசம், நித்திரையில்லாமை, பித்த உபத்திரவங்களைச் சொ
பசி தீபனமும், தேக ஆரோக்கியமும் தரும். டப்பா 1-க்கு
செலவு 1-அல்லது 2-டப்பாக்கள் வரையில் அணா 5-பிரத்தி

3. "பிரமேக நிவாரணி".—எந்தக்காரணத்தினால்
மேகவெள்ளை, வெட்டை, நீர்குற்றல், நீர்தாரை எரிவு, சீ
முதலிய வியாதிகளை ஆண் பெண் இருதாரத்தார்களுக்கு
தும். சீசா 1-க்கு விலை ரூபா 1. வி. பி. செலவு ஒன்
வரையில் அனுப்ப அணா 5-பிரத்தியேகம்.

4. "லக்ஷ்மீகர கஸ்தூரி மாத்திரைகள்".—த
கையிருப்பில் எப்பொழுதும் வைத்துக்கொள்ள
வஸ்து. தந்தநோய் வாய்நாற்றம், அஜீரணம், பித்
கும். தாம்பூலத்துடனாவது, தனியாகவாவது சா
உபயோகித்தால் எப்பேர்க்கொத்தகனத்த சாப்
ணம் செய்வதுடன் வாயில் அநேக மணிநேர
கும். பிரதிதினம் காலையில் இரண்டு மாத்திரை
அக்கினி மந்தம், மலச்சிக்கல், அஜீரணத்தி
வயிற்றுநோய், நெஞ்செரிச்சல் முதலிய பற்ப
காலத்தில் தாம்பூலத்துடன் உபயோகித்து
ஜன்னியில் கொடுக்க ஜன்னி தீரும். இதி
அபாயகரமான வஸ்து சேரவில்லை. காஷ்
வழைத்த கஸ்தூரி, தங்கரேக், பச்சை
பெற்ற மருந்துசாமான்களும் வாசனை
டிருக்கிறது. தாம்பூலத்துடன் உபயோ
வாசனை வஸ்துக்கள் உபயோகிக்கவே
தைகள் முதல் வயது சென்றவர்க
பிளேக், சுரம் முதலானவைகளுக்கு

முதல் 4 மாத்திரைகள் வரையில் வெற்றிலைச்சாற்றில் கொடுக்க சுகமாகும். சீசா 1-க்கு விலை அணா 4. இந்தியாவில் 1-முதல் 12-சீசாக்கள் வரையில் அனுப்ப பாக்கிங்கு தபால் சார்சு அணா 5-ம். சிலோனுக்கு அணா 7-ம் பிரத்தியேகம்.

5. "சர்வரோக சம்ஹாரன்".—இத்தைலம் கொஞ்சம் தேய்த்தால் கை, கால், கணுக்களின் பிடிப்பு, வீக்கம், முடக்கம், மார்பு நோய், தலை நோய், கழுத்து நோய், பக்க சூலை, இடுப்பு நோய், சூதகவலி, பார்சுவாயு, மேகவாயு முதலான இன்னம் தேகத்தில் உண்டாகும் எல்லா நோய்களையும் சீக்கிரத்தில் குணப்படுத்தும். சீசா 1-க்கு விலை ரூபா 1, வி. பி. செலவு ... முதல் 3-சீசாக்கள் வரையில் அனுப்ப அணா 5-பிரத்தியேகம்.

6. "சுகந்த கூந்தல் தைலம்".—இத்தைலத்தால் தலைமயிர், மீசை, ... இமை, வெகு செழிப்பாகவும், நெருக்கமாகவும், கறுப்பாகவும் வளரும். ...களைக் குளிரச்செய்யும். சகல கண் நோய்களும், தலைநோய்களும் நீங் ... செம்மட்டைமயிர் கருக்கும். மயிர் உதிராமல் சார்க்கும். கண்களுக்குப் ...த்தைத் தரும். விலை புட்டி 1-க்கு அணா 8. வி. பி. செலவு 1-அல்லது ... சீசாக்கள் வரையில் அனுப்ப அணா 5-பிரத்தியேகம்.

... "நேத்திர பிந்து".—கண்ணோய், கண் குற்றல், கூசல், நீர் வடி...ல், அந்திமாலை, பீளைக்கட்டல், மாமிசம் வளர்ந்திருத்தல், பூவிழுந் ...ண் சிவப்பு, எரிச்சல், கண் இமை, புருவம் இவைகளின் வலி, ...ல் இவைகளைக் குணப்படுத்தும். மாணாக்கர்களுக்கும் ஆழ்ந்த ... வேலை செய்பவர்களுக்கும் வெகு சிறந்த ஔஷதம். மருந்து ...ல் கண்ணாடி போடவேண்டியது அனாவசியம். சீசா 1-க்கு ... வி. பி. செலவு 1-முதல் 6-சீசாக்கள்வரையில் அணா 5 ...

...பிந்து".—காதில் சீழ் வடிதல், வலி, குத்தல், குடைச்சல், ...ச்சல், செவிடு, இவைகளைக் குணமாக்கும். செவி நன்றாய் ...க்கு விலை அணா 8. வி. பி. செலவு 1-முதல் 6-சீசாக்கள் ...த்தியேகம்.

... சம்ஹாரன்".—இடுப்பு, துடையின் இடுக்கு முதலிய ... ஓயாத நமச்சலைத் தந்து வெகு சீக்கிரத்தில் மற்ற ...கப்படை, சொறிசிரங்கு, தடிப்புப்படை, தேமல் முத ...குணப்படுத்தும். சீசா 1-க்கு விலை அணா 4. வி. பி. ...கள் வரையில் அணா 5-பிரத்தியேகம்.

...ரைகள்".—வயிற்றில் வலி, ஆயாசமில்லாமல் சுக ...ளம், பித்த உபத்திரவங்கள், சகல வாயு, மலச் ...கம், கைகால் முதலிய அவயவங்களின் குடைச் ...வியாதிகளைச் சொஸ்தப்படுத்தும். சீசா 1-க்கு ...ல் 6-சீசாகள் வரையில் அணா 5-பிரத்தியேகம்.

...—தீராத நாள்பட்ட சகல சுரங்கள், குளிர்ச் ...த்த சுரம், அஸ்தி சுரம், மலை சுரம், மார் ...வலி, விலாவலி, முழங்கால்வலி, உடம்பு ...றை சுரம், நாலாமுறை சுரம் முதலிய ... டப்பா 1-க்கு ரூபா 1. வி. பி. செலவு

...டை, தென்னாற்காடு ஜில்லா.

இரங்கோன்

இரஞ்சித போதினி

எப்பொழுதும் சித்திரப்படங்களோடு பிரகாசிப்பதுடன் அறிவைப் பரவச்செய்து ஆனந்தத்தை விளைவித்து யாவர்க்கும் சுகசெல்வ நன்மைகளையும், சுகிர்தபாக்கிய பொக்கிஷத்தையும், நீடூழி பெருகுவிக்கும் ஓர் நவீன மாதாந்தப் பத்திரிகை. இதிலடங்கிய விஷயங்களாவன:—

சுதேச சுகாதார சங்கத்தின் மெம்பர்கள் எழுதும் வியாசங்கள், மனோவசிய சாஸ்திரம், சுகாதாரவிளக்கம், அமெரிக்க சாஸ்திர ஆராய்ச்சி சங்கத்தினர் கண்டுபிடித்த நூதன விஷயங்கள், வைத்தியக்குறிப்பு, பாலர் பரிபலனம், ஸ்திரீகளுக்குரிய விஷயங்கள், விநோத விசித்திர விஷயவிளக்க அதிரசமஞ்சரி, ஹிதோபதேசம், பழமொழி, விடுகதை வினாக்கள், ... நாட்டு வெளிநாட்டு வர்த்தமானங்கள், ஜீவாதார மந்திரோபதேசம் முத... அரிய பெரிய பல விஷயங்கள்.

இதன் வருஷசந்தா ரூபா 2. தேவையானவர்களுக்கு மாதிரி... அனுப்பப்படும்.

மானிட மர்மசாஸ்திரம்

ரூபாய் 300 இனம்

விவரம் பின் குறிப்பிட்டிருக்கும் ஒவ்வொரு புஸ்தகத்திலும் ... ளலாம்.

1. மானிட ஜீவியத்தின் பலபருவங்கள் (ஓர் உபந்நிய... 23 படங்களுடன் ... ...
2. இல்லற இன்ப இரகசியம் (29 படங்கள்) ...
3. ஜனனேந்திரியங்களின் அமைப்பும் அற்புதங்களு...
4. மாதாவின் மாக்ஷிமை (18 படங்கள்) ...
5. சிசுவுற்பத்தி (34 படங்கள்) ... ...
6. கர்ப்பக்கால சுகாதாரவிதிகள் (8 படங்கள்) ...
7. கர்ப்பக்கால நோய்களும் பரிகாரங்களும்
8. மருத்துவசாஸ்திரம் (8 படங்கள்)
9. சிசு பரிபாலனம் (15 படங்கள்) ...
10. ஆண், பெண், மலட்டிற்கு நிவாரணம் (...
11. ஆண்மையின் அழிவும் அதன் மீட்சியும் ...
12. சமயோசித சஞ்சீவி ... ...

தபாற் செலவு ஒரு அ...

மேற்குறித்த புஸ்தகங்களுக்கு ஒரே தட... களுக்குத் தபாற்செலவு உள்பட ரூபா 5-க்...

12. புஸ்தகங்களையும் ஒன்றாகச்சேர்த்... செய்து தங்க எழுத்துக்கள் பதித்த பிரதி ... ரூபா 5-8-0.

" ...

‘தென்னிந்திய விவசாயம்’

32 பக்கங்களுடன் மாதந்தோறும் வெளியாகிறது.

வருஷ சந்தா தபால் உள்பட ... ரூ 3 0 0

	ரூ.	அ.	ப.
விவசாய விளக்கம்	1	4	0
தென்னை	1	0	0
கரும்பு	1	0	0
நெல்	1	0	0

தபால் செலவு பிரத்தியேகம்.

ஜி. இராஜகோபால் பென்ஷன், விவசாய இன்ஸ்பெக்டர்,

தென்னிந்திய விவசாயம்,

வண்ணாரப்பேட்டை, சென்னை.

The South Indian Mills Co., Ltd.

TINNEVELLY.

தென் இந்திய மில்ஸ் கம்பெனி (லிமிடெட்)

திருநெல்வேலி.

மூலதனம் ரூ. 900000.

00 பெறுமான சாதாரண பங்குகளுக்கு விண்ணப்பம்
வாங்கப்படுகிறது.

ள் திருநெல்வேலி ஆபீசுக்கு எழுதிப் பெற்றுக்கொள்
ந்திக்கொட்டையிலிருந்து எடுக்கப்படும் சுத்தமான
ரீ முதல் ஷெ கம்பெனியில் கிடைக்கும்.

OMPLETE LETTER WRITER

Edition Revised and Enlarged

BY

Hari Charan Das

e Re. 1. *(full cloth Gilt.)*

to the Art of Letter Writing for all positions

on :—1. Notes and general Information, 2.
3. Receipt forms, 4. Bill forms, 5. Munici-
department, 7. Postal department, 8. In-
Office, 10. Police Office Correspondence,
ng article on the Tram-car, 12. Medical
Office Correspondence, 14. Correspon-
s, Muktears etc., 15. Correspondence
respondence, 17, News paper Corres-
d Govt. Office Correspondence, 19.
forms, 20. Abbreviations and Daily

pense with the necessity of seeking
ters, Applications, etc.

—**M. L. DAS CO.,**

Baitakkhana Road, Calcutta.